DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 352/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW–1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பாண்டிதுரை |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.காளிமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது முகிழ்தகம் மேலக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். ஒரு தனியார் நிறுவனத்தில் இரவு காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர்எதிரியை எனக்கு தெரியும். எனது வீடு அருகேதான் வசித்து வருகிறார். எனது மகன் முத்துவும் ஆஜர் எதிரியும் ஒன்றாக டைல்ஸ் வேலை செய்தார்கள். கடந்த 26.05.2023 தேதி காலையில் ஆஜர் எதிரி எனது மகனை வேலைக்கு அழைத்தார். எனது மகன் சொந்த வேலை இருப்பதால் வர இயலாது என்று தெரிவித்தார். உடனே ஆஜர் எதிரி எனது

மகனிடம் எனக்குதர வேண்டிய 100 ரூபாய் பணத்தை கொடுடா என்று கேட்டார். உடனே எனது மகன் எனது மனைவியான பூச்செண்டுடம் 100 ரூபாய் பணத்தை ஆஜர் எதிரியிடம் கொடுத்து விடுங்கள் என்று சொன்னார். அதன்படி எனது மனைவியும் எங்கள் வீட்டிலிருந்து சுமார் 700 மீட்டர் தள்ளி உள்ள ஆஜர்எதிரி வசித்து வந்த கொட்டகையில் 100 ரூபாய் பணத்தை ஆஜர் எதிரியிடம் கொடுத்து வந்துவிட்டார்.

2. எனது மனைவி பணத்தை கொடுத்துவிட்டு வந்தவுடன் அன்றைய தினமே காலை 7 மணியளவில் ஆஜர் எதிரி ஒரு கட்டையை எடுத்து கொண்டு வந்தார் அப்போது நான் திண்ணையில் உட்கார்ந்து காபி குடித்து கொண்டிருந்தேன். எனது மனைவி வாசலில் கோலம் போட்டு கொண்டிருந்தார்.ஆஜர் எதிரி அங்கு வந்தவர் புண்டமவனே, தேவுடியா பயலே என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னிடம் பேசினார். உடனே நான் எழுந்து என்னடா காலையில் இப்படி பேசுகிறாய் போ அப்பறம் பேசி கொள்ளலாம் என்று ஆஜர் எதிரியின் கையை பிடித்து சற்று தள்ளினேன். உடனே ஆஜர் எதிரி அவர்கையில் வைத்திருந்து கட்டையை எடுத்து எனது மண்டையில் அடித்துவிட்டார். எனது தலையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது உடனே அக்கம் பக்கத்தார்கள் ஆஜர்எதிரியை சத்தம் போடவும் அவர் அங்கிருந்து செல்லும்போது உன்னையும் உனது மகனையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றார். தலையில் அடிப்பட்டதால் நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன்.

3. வீட்டினுள் இருந்த எனது மகன் என்னை அழைத்து கொண்டு தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூட்டிசென்றார். அங்கு என்னை மேல் சிகிச்சைக்காக திருவாடானை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமபடி அறிவுறுத்தியதின் பேரில் காலை 10 மணியளவில் திருவடானை அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன். மருத்துவமனையில் மருத்துவர் உங்களுக்கு முன் கோபிநாத் சிகிச்சைக்கு வந்து சேர்ந்துவிட்டார் என்று தெரிவித்தார். அப்போதுதான் கோபிநாத் மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட விவரம் எனக்கு தெரியும். மருத்துவமனையில் எனக்கு தலையில் 7 தையல் போட்டார்கள். 4 நாட்கள் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டிருக்கும் போது போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள். நான்

தெரிவித்ததை போலிசார் பதிவு செய்துகொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு அப்போது மயக்கமாக இருந்ததால் நான் புகார் வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.சம்பவத்திற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் அதன்பின் விசாரிக்கவில்லை. நாங்களும் எதிரியின் குடும்பத்தாரும் பேசி கொள்ளமாட்டோம் என்றால் சரிதான். எனது மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் மது அருந்திவிட்டு வேலைக்கு செல்லாமல் முன்பதாகவே பணம் வாங்கிவிடுவார் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று எனதுமகன் மது அருந்திவிட்டு எதிரியிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல எனதுமகன் வீட்டில் துாங்கி கொண்டிருந்தார்.

2. சம்பவயிடம் எனது சொந்த பட்டா இடம் என்றால் எனது அப்பா பெயரில் பட்டா உள்ளது. நான் எனது மகன் மனைவி ஆகியோர் சேர்ந்து எதிரியை அடித்து தாக்கியது தொடர்பாக குற்ற எண்.129/23 வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்கு. மேற்படி வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் எனது வீட்டின் நிலையில் தலையில் இடித்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எங்களை அசிங்கமாக வார்த்தைகளால் பேசவில்லை , கட்டையால் அடிக்கவில்லை என்றும் எங்களுக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையை மனதில் வைத்துகொண்டு எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால்சரியல்ல.

3. தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது சிகிக்சை அளித்த நபரை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் அந்த நேரத்தில் மருத்துவர் இல்லை. ஒருநபர் எனக்கு முதலுதவி மட்டும் செய்தார். தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எப்போது மருத்துவர் இருப்பார் என்றும் நான் வழக்கிற்காக மருத்துவர்

இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டபோது நான் லேசாக மயக்க நிலையில் இருந்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் விவரங்களை நான் தான் தெரிவித்தேன். நான் சொன்னவாறு எதிரி எனக்கு கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எந்தவித பிரச்சனையும் எற்படவில்லை என்றும் எங்களுக்கும் எதிரிக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் பிரச்சரைனயை மனதில் வைத்துகொண்டும் சம்பவத்தன்று எனது மகன் குடித்து விட்டு எதிரியிடம் பிரச்சனை செய்ததை மனதில் வைத்து கொண்டும் அதில் இருந்து தப்பிபதற்காக வேறுவிதமாக ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு எதிரிமீது பொய்யாக புகார் கொடுத்து அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.